# கிளாலி தடை நீக்கம் பற்றி அரசு ஆராய்கிறது


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 28 இதழ் 365
யாழ்ப்பாணம் புதன்கிழமை 10 — 02 — 1993


(கொழும்பு) கிளாலி கடல் பகுதியில் அரசு விதித்திருக்கும் தடை நீக்கப்படலாம் என தெரிய வருகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## படகு சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்) கிளாலி படகுச் சேவை மீண்டும் நாளை முதல் வழமையான நேரத்திற்கு ஆரம்பமாகிறது எனத் தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

இதற்கான பஸ் சேவை நாளை காலை 11-00 மணிக்கு யாழ். பஸ் நிலையத்திலிருந்து நடைபெறுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ)

## யு.என்.எச்.சி.ஆர் குழு யாழ்ப்பாணம் வருகிறது

(யாழ்ப்பாணம்) அகதிகளுக்கான ஐ. நா. தூதுவராலய உயரதிகாரிகள் குழுவொன்று வருகிற சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளார்கள். இவர்கள் வருகிற வெள்ளிக்கிழமை ஜெனிவாவிலிருந்து புறப்பட்டு வெள்ளிக்கிழமை இரவு கொழும்பு வந்து சேரவுள்ளனர்.

இவர்களின் வருகையின் போது பூநகரி-சங்குப்பிட்டி பாதை திறப்பது குறித்து ஆராயப்படவுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

### "தமிழகத்தில் அண்மையில் இடம்பெற்ற

# வெடிகுண்டு சம்பவத்திற்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை"

## ஜெயலலிதா அறிவிப்பு

(சென்னை)

தமிழகத்தில் அண்மையில் இடம்பெற்ற வெடிகுண்டுச் சம்பவங்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எதுவிதத் தொடர்பும் இல்லையென்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா நேற்று தமிழக சட்டப் பேரவையில் சமர்ப்பித்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு—கிழக்கு யுத்தத்தில் 'புக்காரா' விமானங்கள்

(கொழும்பு) ஆர்ஜென்ரீனாவில் இருந்து சிறிலங்கா அரசினால் கொள்வனவு செய்யப்பட்ட 'புக்காரா' விமானங்கள், தற்போது வடக்கு கிழக்கு யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டு

(4-ம் பக்கம் பார்க்க)

## இ. காங்கிரஸ் உறுப்பினர் அனைவரும் வெளிநடப்பு

(சென்னை) தமிழகத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பில்லை என்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா நேற்று சட்டப்பேரவையில் குறிப்பிட்டபோது இ. காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

முதலமைச்சரின் இக்கூற்றினால் சட்டப் பேரவையில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டுள்ளதுடன் இந்திரா காங்கிரஸ் இ கட்சி உறுப்பினர்கள் அனைவரும் முதலமைச்சரின் கூற்றைக் கண்டித்து வெளிநடப்புச் செய்தார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

## மட்டு. படை முகாம்களுக்கு அமைச்சர் குழு விஜயம்

(கொழும்பு) மட்டு மாவட்டத்திலுள்ள இராணுவ முகாம்களுக்கு மாகாண சபைகள் அமைச்சரும். வெளிவிவகார இராஜாங்க அமைச்சருமான ஜோன் அமரதுங்கா நாடா

4-ம் பக்கம் பார்க்க)

## மாணவர் உணவு முத்திரை குமணவில் வந்துசேர்ந்தன

(யாழ்ப்பாணம்) பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரைகள் சுமார் 2 லட்சம், யாழ். சமூக சேவைப் பகுதிக்கு

4-ம் பக்கம் பார்க்க)

## இந்திரா காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ளதா? சபையில் முதல்வர் கேள்வி

(சென்னை) இ. காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிளந்துவிட்டதா! என்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று தமிழ சட்டசபையில் கேள்வி ஒன்றை எழுப்பியபோது சபையில்

(4-ம் பக்கம் பார்க்க)

## படையினர் திருத்த சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு) கடற்படை, விமானப்படை இராணுவம் சம்பந்தமான திருத்தச்சட்ட மூலம் ஒன்று நேற்று நாடாளுமன்றத்தில், மான டி. பி. விஜேதுங்கா பிரதம மந்திரியும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமானவினால் சமர்ப்பிக்கப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

### ★ ஒவ்வொரு மாதமும்

## 3 கப்பல் உணவுப்பொருளை யாழ். அனுப்ப கோரிக்கை

(யாழ்ப்பாணம்) காங்கேசன்துறைப் பாதை திறக்கும் வரை மாதம் மூன்று கப்பல்களில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை அனுப்பி வைக்குமாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்தை கோரியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் ஏற்

(4-ம் பக்கம் பார்க்க)

### களஞ்சிய இருப்புக் கிடைத்ததும்

## காங்கேசன் பாதை திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்) காங்கேசன்துறையிலுள்ள களஞ்சியத்தில் எவ்வளவு பொருட்கள் கையிருப்பிலுள்ளன என்பது பற்றிய விபரங்கள் கிடைத்ததும் அந்தப் பாதை திறக்கப்படுமென

(4ம் பக்கம் பார்க்க)

## உணவுத் தட்டுப்பாட்டை நீக்க அரசு நடவடிக்கை

(கொழும்பு) வடபகுதியில் தற்பொழுது நிலவும் உணவுத் தட்டுப்பாட்டை நீக்குமுகமாக விரைவில் அத்தியாவசியப் பொருட்கள் மேலதிகமாக அங்கு அனுப்பி வைக்கப்படுமென அத்தியாவசியச் சேவைகள் நாயகம் ஜனப் ராபின் தெரிவித்துள்ளார்.

3290 தொன் உணவுப் பொருட்கள் ஏற்கனவே கப்பல் மூலம் வடபகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், மேலதிக உணவுப் பொருட்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் வடபகுதிக்கு அனுப்பவென குமாரி, மெனிஞ ஆகிய கப்பல்களில் அரிசி, மா, சீனி ஆகிய உணவுப் பொருட்கள் உட்பட

((4-ம் பக்கம் பார்க்க)

### வடமராட்சி கிழக்கில்

## இரண்டாவது நாளாக மறியற் போராட்டம்

(தாளையடி) பொருளாதாரத் தடையை நீக்கக் கோரியும், நிறுத்தப்பட்ட இலவச நிவாரணத்தை மீண்டும் வழங்கக் கோரியும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்பாக நேற்று இரண்டாவது நாளாக மறியற் போராட்டம் நடைபெற்றது. பணிமனை முன்பாக பெருந்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-7180)

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும் வீடுகளிலும் கற்பிக்கப்படும். தொடர்பு: 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (சி-7201)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை சாலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் கி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-7197)

### ஜமுநாரம் பழம் தேவை

நல்ல முற்றிப் பழுத்த ஜமுநாரம் பழம் (தோடம்பழம்) கொள்வனவு செய்யப்படும். உங்கள் உற்பத்தி சிறிதளவாக இருப்பினும் 2 அல்லது 3 கிலோ கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (கனி லிமிட்டெட். 14, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (ஏ-2865)

## இராசி பலன்

10-02-1993

புதன்கிழமை

(தமிழுக்கு தை 28)

சதுர்த்தி மு.இ. 9-00வரை, உத்தரம் மு.ப. 10-33 வரை, அமிர்தசித்தயோகம், இராகு காலம் நண்பகல் 12-34 முதல் 2-04 வரை, சுபநேரம் மாலை 5-04 முதல் 6-34 வரை.

மேடம்: தர்க்கவாதம், மனமகிழ்ச்சி, கல்விஞானம்.

இடபம்: பிறர் சந்தேகம், கருத்து முரண்பாடு, அலைச்சல்.

மிதுனம்: குற்றம் காணல், அநாகரிக செயல், மனக்குழுறல்.

கடகம்: சாதகமான சூழ்நிலை, தொழில் சிறப்பு, பணவரவு.

சிங்கம்: மனச்சோர்வு, குடும்ப பிரிவு, இனசனபகை.

கன்னி: பரந்த மனப்பான்மை, தொழில்மேன்மை, காரியசித்தி.

துலாம்: நம்பிக்கை தளர்தல், அவசர போக்கு, கடும் கினம்.

விருச்சிகம்: தொழில் அதிர்ஷ்டம், மனமகிழ்ச்சி, புத்திரர் பெருமை.

தனுசு: நோக்கத்தை நிறைவேற்றல், செல்வாக்கு, கற்பனை.

மகரம்: முரட்டுத்தனம், முடிவுதாமதமாதல், வெறுப்பு.

கும்பம்: பண முடக்கம் தடுமாற்றம், குடும்பசிக்கல்

மீனம்: துணைவருமானம், பாராட்டு, தொழில் சிந்தனை.

ஜோஸ்யர்

---


# திருமண நன்றி நவிலல்

03-02-93ல் நிகழ்ந்த

எமது

## திருமண வைபவத்தில்

கலந்துகொண்டு எமக்கு ஆசீர்வாதம் வழங்கியும், அன்பளிப்புகள் தந்தும் மகிழ்வித்த உறவினர்கள், நண்பர்கள், கலைஞர்கள், பெரியோர்கள் அனைவருக்கும்

எமது

## இதயபூர்வமான நன்றிகளைத்

தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தனித்தனியே நன்றிகள் செலுத்த முடியாமைக்கு மன்னிக்கவும்.

இப்படிக்கு

தெட்சணாமூர்த்தி உதயசங்கர் தம்பதிகள்

(சி-7215)

---

அகில இலங்கை

# இளங்கலைஞர் மன்றத்தின் 13வது இசைவிழா

இடம்: **மன்ற கலாமண்டபம்**

சட்டநாதர் வீதி, நல்லூர்

**2ம் நாள் 10-2-93 புதன்**

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவில்

மாலை 4 00 — 5-00

மங்கள இசை உதயநாதன் குழுவினர்

நாதஸ்வரம்: என் நம்பிராஜன்

கே. உதயநாதன்

தவில்: கே. சச்சிதானந்தன

கே. நாகேந்திரம்

**5-00 5-15 வயலினிசை**

வயலின் - எஸ். கவிதா, வை. பாரதி, கனிஷியா. பி. சுபத்திரா, யே. ரனிதா

மிருதங்கம் - பி. ரதிருபன்

**5-15 5·30 பாட்டு**

எஸ். சுகந்தி, என். சுபாஷினி, வி. தயாளினி

எஸ். குகப்பிரியா, எஸ். குகரூபன், ஆர். ராஜி, கே. கலாஜினி, ஆர். அருளேஸ்வரி

பி. ஜீன்மேரி, கே. பிரியதர்ஷினி

வயலின் - வி. ரேணுகா

மிருதங்கம் - சதா வேல்மாறன்

**5-30 6-00 பாட்டு - வதனஜோதி ஆறுமுகம்**

வயலின் - பாக்கியலக்ஷ்மி நடராஜா

மிருதங்கம் - எஸ். நாகராஜன்

**6-00 6-45 பாட்டு எஸ். சிவஞானராஜா**

வயலின் - பாக்கியலக்ஷ்மி நடராஜா

மிருதங்கம் - எஸ். பாலச்சந்திரசர்மா

**இரவு 6-45 7-00 மங்கள விளக்கேற்றல்**

திரு. சி. சோமதாஸ் (வர்த்தகர்)

திரு. பொ. மாசிலாமணி

(தலைவர், வேலணை ப. நோ. கூ. சங்கம்)

திரு. க. நந்தகுமாரன் (வர்த்தகர்)

தலைவர்: டாக்டர் ரி. கெங்காதரன்

சிறப்பு விருந்தினர்: திரு. ரி. வைத்திலிங்கம்

(மாவட்டப் பிரதி ஆணையாளர்)

**7-00 8-00 இசைக்கச்சேரி**

பாட்டு - என். வி. எம். நவரத்தினம்

வயலின் - வி. கே. குமாரசாமி

மிருதங்கம் - எம். சிதம்பரநாதன்

கெஞ்சிரா - எஸ். நாகராஜன்

**8-00 9 15 பட்டிமன்றம்**

நடுவர்: திரு. இ. ஜெயராஜ்

பொருள்: "முத்தமிழின் தலைமைக்குப் பெரிதும் உரியது

இயலா? இசையா?

திரு. இரா. செல்வவடிவேல் — திரு. எம். திலகநாயகம் போல்

திரு. க. குமாரதாசன் — திரு. த. சிவகுமாரன்

திரு. ஸ்ரீபிரசாந்தன் — திரு. க. ஜெயநிதி

நாடகமா?

திரு. ஏ. ரி. பொன்னுத்துரை

திரு. ஆறு. திருமுருகன்

திரு. எஸ். மணிமாறன்

வாழ்த்துகிறோம்

## நியூ லிங்கம் ஸ்ரோர்ஸ்

திருநெல்வேலி மார்கட்.

(ஏ 2861)

---

# நன்றி

எமது அழைப்பினை ஏற்று 29-01-1993-ம் திகதி யாழ். திவ்விய ஜீவன மண்டபத்தில் நடைபெற்ற எமது மகளின் திருமண வைபவத்தின்போதும் இல்லத்தில் நடைபெற்ற வரவேற்பு உபசாரத்தின் போதும் கலந்துகொண்டவர்களுக்கும் பரிசில்கள், வாழ்த்துக்கள், வழங்கி மணமக்களை ஆசீர்வதித்த சகல அரசாங்க திணைக்கள அதிகாரிகள், ஊழியர்கள், நண்பர்கள், உறவினர்கள் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தனித்தனியே ஒவ்வொருவருக்கும் நன்றிகூற இயலாமையினால் இதனை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இப்படிக்கு

திரு. திருமதி கா. மாணிக்கவாசகர்,

அரசாங்க அதிபர் இல்லம்,
சுண்டிக்குழி,
யாழ்ப்பாணம்.

(எ-2867)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. பொருளியல் பேராசிரியர்
2. நுண்கலையில் பேராசிரியர்
3. பொருளியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11/ உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
4. கல்வியியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11/ உதவிவிரிவுரையாளர் (தகுதிகாண்)
5. வர்த்தகத்தில் /முகாமைப்படிப்புகளில் / வர்த்தகைத் தொழிற் சட்டத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11/ உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
6. கல்வியியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11/ உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)

பட்டப்படிப்புத் தரத்தில் வரலாற்றினை ஒரு பாடமாக கொண்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அத்துடன் உயர்பட்டதாரி மட்டத்தில் கல்வித்தத்துவப்பரப்பில் கடமையாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்:

**பதவிகள்**

பேராசிரியர்
ரூபா 12,000-6 X 300-14,000/- (மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1
ரூபா 9,600 - 8X250 - 11,600 (மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II
ரூபா 8000 - 5 X 250 - 9250/- மாதமொன்றுக்கு

உதவி விரிவுரையாளர்
ரூபா 3900/- நிலையானது (மாதமொன்றுக்கு)

இத்துடன் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பும் வழங்கப்படும்.

துறைத்தலைவரினாலும் பீடாதிபதியினாலும் ஓராண்டுச் சேவையைத் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளாரென அத்தாட்சிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவரை விரிவுரையாளர் (தகுதிகாண்) என்ற பதவிப் பெயரில் நியமிக்கலாம் என்பதுடன் துணைவேந்தர் அவரை ரூபா 4500 - 10X200 - 6500/- மாதமொன்றுக்கு) சம்பள அளவுத்திட்டத்தில் வைக்க முடியும்.

பேராசிரியர் பதவிக்கான விண்ணப்ப முடிவுத்திகதி 1993-04-30 ஆகும், ஏனைய பதவிகளுக்கு முடிவுத்திகதி 1993-03-19.

மேற்குறித்தபதவிகளுக்கான விண்ணப்பப்பத்திரங்களை ரூபா 20/- நிதிக்கிளையில் செலுத்து இப்பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/ தாபனக்கிளையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். தபால் மூலம் இவ்விண்ணப்பபடிவங்களை பெற விரும்புவோர் அதற்கான வேண்டுகோளுடன் பதிவாளர் நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் ரூபா 20/-க்கான காசுக்கட்டளை/ தபாற்கட்டளையுடன் 23 X10 ச. மீ அளவுடையதும், சுயமுகவரியிடப்பட்டதும், ரூபா 2/ முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல்வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல்வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்பு தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்தில் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993-02-05 (எ-2864)

யாழ்ப்பாணம்

★ 'ஒபரேஷன் கறுப்பு நரி'

# வவுனியாபம்பைமடுபகுதியில் 50 வீடுகள் வரை அழிப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா பம்பை மடுக் கிராமத்தில் படையினரின் பாரிய நடவடிக்கையால் மூன்று மைல் பிரதேசமான அக்கிராமம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

'ஒபரேஷன் கறுப்பு நரி' நடவடிக்கையின்போது குண்டு வீச்சு விமானங்கள் அக்கிரா மத்தை நோக்கி அகோர மான குண்டு வீச்சுத்தாக்கு தல்கள் மேற்கொண்டதுடன் படை முகாம்களிலிருந்து ஷெல்தாக்குதல்களை நடாத் தியிருந்தமையினால் ஐம்பதுக்கு மேற்பட்ட வீடுகள் தரை மட்டமாகியதுடன் பல கால் நடைகளும் இறந்துள்ளன.

அங்கு வசித்த மக்களில் பலர் கிராமத்தை விட்டு உட மைகளை இழந்த நிலையில் மடு அகதி முகாம் உட்பட பிற இடங்களில் தஞ்சமடைந் துள்ளனர்.

பாதுகாப்புத் தேடிச்செல்ல முடியாத மக்களில் பலர் இராணுவத்தினரிடம் அகப் பட்டுள்ளனர். இராணுவ நட வடிக்கையினால் அறுவடைச் செய்கை எதிர்நோக்கியிருக் கும் நெற்பயிர்கள் உட்பட உழுந்து பயறு, நிலக்கடலை போன்ற தானிய பயிர்ச்செய் கைகளும் நாசமாகியுள்ளது.

பம்பைமடுக்கிராமத்தில் பாரிய முகாம் அமைக்கும் முயற்சியில் நூற்றுக்கணக் கான படைகள் வீடுகள் வேலி கள் மதில்களை உடைத்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (56-சி)

# பாட்டாளி மக்கள் கட்சி தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சி நேற்று தமிழகத்தின் பலபகுதி களிலும் பெரும் ஆர்ப்பாட் டங்களை நடாத்தியுள்ளது. தமிழக அரசு உணவுப் பொருட்களின் விலைகளை அதி கரித்து வருவதைக் கண்டித்து குறிப்பாக அரிசி விலை அதி கரிப்பை எதிர்த்தே இந்த ஆர்ப் பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது பெருமளவு கட்சித் தொண்டர்களும் பொதுமக்க ளும் கலந்து கொண்டதாக வும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# கல்லால் எறிந்து கொல்லுமாறு தீர்ப்பு

(கராச்சி)

விவாகரத்துச் செய்யாமல் 2வது தடவையாக திருமணம் செய்துகொண்ட பாகிஸ்தான் பெண் ஒருவரை, கல்லால் எறிந்து கொலை செய்யும்படி அந்நாட்டு நீதிமன்றம் ஒன்று நேற்று தீர்ப்பு அளித்தது.

இஸ்லாமியச் சட்டப்படி, விவாகரத்துச் செய்யாதபெண் ஒருவரை விவாகம் செய்த மேற்படி பெண்ணின் 2வது கணவருக்கு நூறு சவுக்கடி வழங்கும்படியும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. (சி)

# நாடுமுழுவதும் 300 மத்திய கல்லூரிகள்

(கொழும்பு)

நாடு முழுவதும் 300 மத் திய கல்லூரிகளை அமைக்கும் நடவடிக்கையில் கல்வியமைச்சு துரிதமாக ஈடுபட்டு வருகின் றது.

இவ் விடயம் குறித்து ஆராய வதற்காக கல்வி ராஜாங்க அமைச்சின் செயலர் ஆர். ஜி. அனஸ் தலைமையிலான கருத் தரங்கு ஒன்று கடந்த வாரம் இசுருபாயா நடை பெற்றது. (சு-இ)

# ஜெயலலிதா மீது வழக்கு; சுவாமி அனுமதி கோருகிறார்

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மீது வழக்குத் தொடர அனுமதிக்குமாறு ஜனதாகட்சித் தலைவர் டாக் டர் சுப்பிரமணிய சுவாமி தமிழக ஆளுநர் பீஷ்மநாரா யணசிங்கிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

முதல்வர் ஜெயலலிதா மீது ஊழல், மோசடி மற்றும் லஞ் சக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவே வழக்குத் தாக்கல் செய்ய இவர் முயற் சிப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேபோன்ற பல குற்றச் சாட்டுக்களை ஜெயலலிதா மீது சுமத்தியுள்ள தி.மு.க. தலைவர் திரு மு. கருணாநிதி யும் முதல்வா மீது வழக்குத் தொடர அனுமதிதருமாறு ஏற்கனவே தமிழக ஆளுநரிடம் கோரிக்கை விடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (சு-இ)

# விமானங்கள் வானில் மோதின 133 பயணிகள் பலி

(லண்டன்)

ஈரான் நாட்டு பயணிகள் விமானம், ஒன்று அந்த நாட்டு இராணுவ விமானத்துடன் மோதிச் சிதறியதில் 132 பயணிகள் கொல்லப்பட்ட னர்.

தெஹ்ரான் விமானநிலை யத்தில் இருந்து பயணிகள் விமானம் புறப்பட்ட சில நிமிட நேரத்தில் மேற்படி விபத்து நடந்தது.

119 பயணிகளும், 12 விமா னப் பணியாளர்களும் இந்த விமானத்தில் பயணம் செய் தனர் என்றும், ஆனால் இரா ணுவ விமானத்தில் பயணம் செய்தோர் பற்றிய பூரண விபரம் கிடைக்கவில்லை என் றும் கூறப்படுகின்றது. (சு)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பஸ்நிலைய ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வரு டாந்த அலங்கார உற்சவ இறுதிநாள் நிகழ்ச்சிகள் இன்று நடைபெறுகின்றன. காலை விசேட அபிஷேகங்க ளும் மாலையில் பெருமான் அலங்கார பூத்தண்டிகையில் வீதியுலா வருவார்.

அதனைத் தொடர்ந்து "ஞானமிர்தம்" நிகழ்ச்சி இடம்பெறும். இந்நிகழ்ச்சிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல் லூரி அதிபர் கே. சண்முக நாதபிள்ளை தலைமை தாங்கு வார்.

இந்நிகழ்ச்சியில் காரை நகர் கம்பன் கழக அமைப்பா ளரும், யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியருமான தமிழருவி த. சிவகுமாரன் "அறிவினால் ஆவதுண்டோ" என்னும் பொருளிலும், ஜோஸ்யர் ஐயா சச்சிதானந்தம் 'சும்மா இருத்தலே சுகம்" என்னும் பொருளிலும் அருளுரை வழங் குவர். (எஸ்)

0 0

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை றோ. க. த. வித்தியாலயசாலையின் புதிய மண்டபத்தை யாழ்ப்பாணம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் இன்று காலை 10 மணிக்குத் திறந்து வைக்கின்றார்.

மேற்படி வித்தியாலயத் தின் அதிபர் திரு. சு. மலக்கியாஸ் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத் துக்கு வண்ணார்பண்ணை தெற்கு கொத்தணி அதிபர் திரு. சி. சிவசரவணபவன் சிறப்பு விருந்தினராகக் கல ந்து கொள்கின்றார். (வி)

0 0
0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். லயன்ஸ் கழக ஆதர வில் யாழ்.வட்ட லியோ கழக அங்குரார்ப்பணக் கூட்டம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி யில் இன்று 10ம் திகதி புதன் கிழமை பி.பகல் 3-30 மணி க்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராக லயன் எஸ். எஸ். இராம கிருஷ்ணன் கலந்து கொள்ள வுள்ளார். (ஸ)

# பாடசாலைகளுக்கு தளபாட விநியோகம் உடன் நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டுக்கு கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள பாடசாலை களுக்கான தளபாட விநியோ கம் தற்போது நடைபெற மாட்டாதுஎன கல்வித்திணைக் கள வட்டாரங்கள் தெரிவித் தன.

சகலபாடசாலைகளுக்குமான தளபாடங்களும் வந்தபின் தளபாட விநியோகம் ஆரம் பிக்கப்படுமெனவும் கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். -159-சி

# ஆலங்கேணிப் பகுதியில் தொற்றுநோய் பரவுகிறது

(யாழ்ப்பாணம்)

ஆலங்கேணி-பூநகரி-நல்லூர் பகுதிகளில் யாழ்ப்பாணம் வருவதற்காக கடந்தமாதத்தி லிருந்து காத்திருக்கும் ஆயிரக் கணக்கான மக்கள் அடிப் படைவசதியின்றி பரிதவிக் கிறார்கள்.

பல தொற்றுநோய்கள் அப் பகுதியில் வேகமாக பரவிவரு கிறதாம். நீர்உணவுப்பிரச்சினை சுகாதாரக் குறைபாடு மிக மோசமாக ஏற்பட்டுள்ளதனால் வயிற்றோட்டம், காய்ச்சல் தடிமன், சளி போன்ற நோய் களினால் பலர் பாதிப்படைந்து வருகிறார்கள் -56-சி

# பஸ்ஸில் தீ 100 பேர் பலி

(லண்டன்)

நைஜீரியாவில் நேற்று முன் தினம் பயணிகள் பஸ்ஸில் ஏற் பட்ட தீவிபத்தில் 100 பயணி கள் கருகிப் பலியானார்கள்.


யாழ்மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

## காரிக்கன் துணிகள் கொள்வனவு செய்வதற்கான கேள்வி கோரல்

கீழ்க்குறிப்பிடப்படும் துணி வகைகளைக் கொள் வனவு செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1. கைத்தறி காரிக்கன் (நூறுவீதம் பருத்தி)
   1885 மீற்றர்
   40எஸ் X 40எஸ் செறிவு 60 X 52 அகலம் 39''/40''
   தரம் – 1
2. 39'' மின்தறி காரிக்கன்
   (பருத்தியும் பொலியஸ்ரரும் சேர்ந்தது)
   730 மீற்றர்
   40எஸ் X 45எஸ் பொலியஸ்ரர் கொட்டன்
   செறிவு 60 X 56 அகலம் 39''/40''
3. 39'' மின்தறி காரிக்கன் தரம் – II
   (பருத்தியும் பொலியஸ்ரரும் சேர்ந்தது)
   1135 மீற்றர்
   40எஸ் X 40எஸ் பி. வி. செறிவு 60 X 56
   அகலம் 39'' / 40''

விலை மீற்றருக்கு கோரல்வேண்டும்.

மேற்படி கேள்வி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் 15-02-93க்குப் பிந்தாது பொதுமுகா மையாளர், யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட் டுறவுச் சங்கம், இருபாலை வீதி, கோண்டாவில் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ நேரிலோ அனுப் பப்படுதல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மூலையில் கேள்வி கோரல் என எழுதப்படவேண் டும். எந்த ஒரு கேள்வியையும் ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமை சங்கத்திற்கு உண்டு.

பொது முகாமையாளர்

(எ-2862)



வீட்டினைச் சுற்றி தோட்டங்கள் தழைக்க
நாட்டினில் எங்கும் பசுமையே செழிக்கும்



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

## ஊர்காவற்றுறைப் பிரிவின் ஒத்திவைக்கப்பட்ட விசேட பொதுக்கூட்டம்

மேபற்டி கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (14-02-93) பிற்பகல் 2-00 மணிக்குக் கிளையினால் நடாத்தப்பட வுள்ளது. 09-11-1992 வரை கிளையில் அங்கத்துவப் பணம் செலுத்தப்பட்ட அங்கத்தவர்கள் மாத்திரம் இக்கூட்டத்தில் பங்குபற்றலாம். இக்கூட்டத்துக்கு வருகை தருபவர்கள், தேசிய அடையாள அட்டை யையும் 1992 அங்கத்துவ அட்டையோ அல்லது யாழ் கிளைத் தலைமையகத்தில் 1992 அங்கத்துவப் பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டையோ, சமர்ப்பித்தல் வேண்டும். கூட்ட நிகழ்ச்சிகளைக் கிளைத் தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம். தனித்தனிக் கடிதங்கள் அனுப்பப்பட மாட்டாது.

கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
09-02-1993.

(ஏ 2866)

# பத்து லட்சம் குழந்தைகள்

## போஷாக்கின்மையால் பாதிப்பு!

(கொழும்பு)

இலங்கையில் பத்து லட்சம் குழந்தைகள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் ஐந்து வயதுக்குட்பட்டவர்கள்.

யூனிசெப் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தெற்காசிய பிராந்தியத்தில் நல்ல சமூகநலத் திட்டங்கள் உள்ள இலங்கையில் இந்த அளவுக்கும் குழந்தைகள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டது துரதிர்ஷ்டவசமாகும்.

வடக்குக்கிழக்கில் தொடர்ந்து யுத்தம் நடைபெறுகிறது. ஆனால் அந்தப் பகுதிகளில் புள்ளிவிபரங்களை மேற்கொள்ள முடியவில்லை. அந்தப் புள்ளிவிபரங்கள் கிடைக்குமாயின் பாதிக்கப்பட்ட குழந்தைகள் தொகை அதிகமாகவே இருக்கும்.

இலங்கையில் குழந்தை நலத் திட்டங்களுக்காக இரண்டரை கோடி ஸ்டேர்லின் பவுண்ஸ் யூனிசெப் நிறுவனத்துக்குத் தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை இந்தத் தொகை கிடைக்கவில்லையெனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## ஆய்வுக்கட்டுரை அச்சிடல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு ஆய்வுக் கட்டுரை புத்தக வடிவில் அச்சிட்டுத் தருவதற்குத் தகுதியான அச்சகர்களிடம் இருந்து பொறிபிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| புத்தகத்தின் அளவு | — | ¼ கிறவுண் |
| பக்கம் | — | 160 (அண்ணளவாக) |
| பிரதி | — | 500 புத்தகங்கள் |
| படங்கள் | — | 75 (தபால்அட்டை அளவில்) |
| புத்தகத்தின் கவர் | — | தடித்த, கடினமானமட்டையில் இரண்டு நிற அச்சுப்பிரதி செய்த கவர் இடப்படல் வேண்டும். |

புத்தகத்தின் உள்ளடக்கத்தை இப் பல்கலைக்கழகக் கல்விக்கிளையில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். பொறிபிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1993-02-17 காலை 10-00 மணிக்கு முன்பாக 'நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். கடித உறையில் இடதுபக்க மேல்மூலையில் 'ஆய்வுக் கட்டுரை அச்சிடல்' என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 1993-02-17 காலை 10-30 மணிக்குத்திறக்கப்படும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

1993-02-09. (எ-2869)

---

### மட்டு. படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளுமன்ற உறுப்பினர்கள் சகிதம் தேற்று விஜயம் செய்தார்.

பாதுகாப்பு படையினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்த அவர் படையினருக்கு தொலைக்காட்சி பெட்டிகளையும் வானொலிப் பெட்டிகளையும் வழங்கினார்.

### யு. என். எச். சி. ஆர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் இடம்பெயர்ந்தோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உணவுப் பற்றாக்குறை, மருந்துத் தட்டுப்பாடு எரிபொருள் தட்டுப்பாடு என்பன குறித்து இவர்கள் ஆராய்வர். (159)

### இந்திரா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த அ. தி. மு. க. உறுப்பினருக்கும். இ. காங்கிரஸ் கட்சி உறுப்பினருக்குமிடையில் பெரும் வாக்குவாதம் ஏற்பட்டது.

நேற்றுமுன்தினம் சட்டசபையிலிருந்து எதிர்க்கட்சியான இ. காங்கிரஸ் கட்சி உறுப்பினர் முதல் தடவையாக வெளிநடப்புச் செய்தபோது எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் உட்பட ஒரு பகுதியினர் சபையில் மௌனமாக இருந்ததினால் இக்கட்சி இரண்டாகப் பிளந்துவிட்டது என்று பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருப்பதை செல்வி ஜெயலலிதா சுட்டிக்காட்டினார்.

இச்சந்தர்ப்பத்தில் முதலமைச்சருக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்குமிடையில், மாறி மாறிப் பெரும் வாக்குவாதம் ஏற்பட்டபோது சபையில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. (க-ரி)

### உணவுத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்வேறு வகையான பொருட்கள் கொழும்புத் துறைமுகத்தில் ஏற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-ரி)

### ஒவ்வொரு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ள உணவுப் பற்றாக்குறையைச் சுட்டிக்காட்டி விரைவில் உணவுப்பொருள்களை அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

இதேவேளையில் இன்னும் ஓரிரு தினங்களில் மெஹனவல்சப் பல்மூலம் 1500மெட்ரிக்தொன் அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருட்களுடன் யாழ்ப்பாணம் வந்து சேரவுள்ளது. (159-இ)

### வடக்கு கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரையில் இந்த யுத்தத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வந்த 'சியாமாசிட்டி' ரக விமானங்களை விட, இந்த விமானங்கள் தாக்குதல் வேகம் நிறைந்தவை என்றும், குறிப்பிட்ட இலக்கை நோக்கித் துல்லியமாகத் தாக்குதல் நடத்தும் திறன் வாய்ந்தவை என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

சிறிலங்கா ஆர்ஜன்ரீனாவிடமிருந்து புக்காரா விமானங்களைக் கொள்வனவு செய்ததும், தாக்குதலுக்கு ஏற்றவாறு அவை மாற்றி அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (க-ரி)

### மாணவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்து சேர்ந்தன. அண்மையில் வந்து சேர்ந்த ருமண கப்பல் மூலம் இவை யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டன.

1992 நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான இந்த மதிய உணவு முத்திரைகளை உடனடியாகப் பிரதேசச் செயலர்கள் மூலம் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். சமூக சேவைப் பகுதி மேற்கொண்டுள்ளது. யாழ். குடாநாட்டின் சகல பாடசாலைகளுக்கும் இவை விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1993ம் ஆண்டுக்கான உணவு முத்திரைகளையும் கொழும்பிலிருந்து பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகச் சமூகசேவைப் பகுதி அதிகாரிகள் தெரிவித்தனர். (161-ரி)

### களஞ்சிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவருகிறது.

காங்கேசன் களஞ்சியத்தில் எவ்வளவு பொருட்கள் இருப்பிலுள்ளன என்பது குறித்து தெரிந்தாலே அதற்கேற்றவாறு வாகன அணியை ஒழுங்கு படுத்த முடியும் என யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

காங்கேசன் துறையிலுள்ள பொருட்களின் கையிருப்பை தனக்கு தெரியப்படுத்துமாறு யாழ். அரச அதிபர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுள்ளார். (159-இ)

### இ. காங்கிரஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல இ. காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வன்மையாகக் கண்டித்துஉரையாற்றினார்கள்

### வடமராட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரளான மக்கள் மறியல் போராட்டம் நடத்தியதால் அலுவலகம் திறக்கப்படவில்லை. வேலைக்கு வந்த ஊழியர்கள் திரும்பிச் சென்றனர்.

### தமிழகத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: விழுப்புரம் பகுதியில் வெடிகுண்டு வைத்து காந்தி சிலை தகர்க்கப்பட்டதற்கும், இரு இடங்களில் இந்திரா காங்கிரஸ் கட்சி அலுவலகங்கள் குண்டு வைத்துச் சேதப்படுத்தப்பட்டதற்கும் இடதுசாரித் தீவிரவாதக் குழுக்களே காரணமாகும். (வி-ரி)

### கிளாலி தடை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பகுதியில் விதிக்கப்பட்டிருக்கும் போக்குவரத்துத் தடையை நீக்குவது குறித்து அரசாங்கம் தற்போது ஆராய்ந்து வருவதாக ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் நேற்று முன்தினம் இரவு தெரிவித்ததாக வெரித்தாஸ் சிங்கள சேவை அறிவித்தது. (இ)

### படையினருக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபைகள் அமைச்சரும், வெளிவிவகார இராஜாங்க அமைச்சருமான திரு. ஜோன் அமரதுங்க மேற்படி திருத்தச்சட்டமூலம் சம்பந்தமாகப் பேசுகையில்: "படையினரின் ஒழுக்கம் பேணப்பட வேண்டியதன் அவசியம் தற்போது ஏற்பட்டதனாலேயே இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டதாக கூறினார்.

---

# தமிழீழ காவல்துறை

# பதவி வெற்றிடங்கள்

## உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

### கல்வித் தகமைகள்:

8ம் வகுப்பு தொடக்கம் க. பொ. த. (உயர்தரம்) வரை

உயரம்:- 5' 6''

வயது:- 18 தொடக்கம் 30 வரை

மேற்கூறிய தகமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 20—02—93ம் திகதி வரை பழைய பூங்காவிலுள்ள காவல்துறை அலுவலகத்திற்கு நேரடியாகச் சமூகம் தரவும். தபால்மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆண் / பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இதுவரை விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களும், நேர்முகத்தேர்வின் இறுதித் தேர்விற்கு அழைக்கப்படாதவர்களும் உடனடியாகச் சமூகம் தரவும்.

பா. நடேசன்,
பொறுப்பாளர்,
காவல்துறை,
தமிழீழம்.

(எ-2868)

---

## மரண அறிவித்தல்

### செல்லையா பொன்னுத்துரை

சாத்திரியார்

(பிரபல காண்டம் வாசிப்பவர்)

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த செல்லையா பொன்னுத்துரை சிவபதம் அடைந்து விட்டார். அன்னார் அரசரத்தினத்தின் அன்புக் கணவரும் காலம் சென்ற சங்கரசிவம், சண்முகலிங்கம், டாக்டர் பரமலிங்கம், விக்னேஸ்வரன் சீதாலெட்சுமி கமலாம்பிகை, மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் காலம் சென்ற நல்லையா, செல்வராஜா டாக்டர் சபாநாயகம் நீலாதாட்சியம்மா, சிவகுருச் செல்வி, வசந்தாதேவி நிர்மலாதேவி, ஆகியோரின் அன்பு மாமனருமாவார். அன்னாரின் பூதவுடல் அன்னாரின் இல்லத்திலிருந்து ஈமக்கிரிகைகளுக்காக இன்று மாலை 4-00 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: டாக்டர் பொ. பரமலிங்கம் J. P.
(மகன்)

நீதிராஜா வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (கி-7218)

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் பிறவுண்ரோட் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, SriLanka, under Licence Nnmber B/10336/B